செய்தி வெளியீடு எண்:518 நாள்:05.11.2016

## தமிழ் வளர்ச்சித் துறை

## செய்தி வெளியீடு

தமிழ் வளர்ச்சித் துறையால் சென்னை மாவட்ட அளவிலான 11, 12ஆம் வகுப்புப் பயிலும் மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு 2016–17ஆம் ஆண்டிற்கு கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் 04.11.2016ஆம் நளன்று சென்னை எழும்பூர் மாநில மகளிர் மேல்நிலைப்பள்ளியில் நடத்தப்பெற்றது. இதில் **கவிதைப் போட்டியில்** அசோக் நகர் அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளி 12ஆம் வகுப்பு மாணவி செல்வி லோ. கற்பகம் முதல் பரிசையும், பிரின்ஸ் பதின் மேல்நிலைப்பள்ளி 12ஆம் வகுப்பு மாணவி செல்வி தா. ஜனனி 2ஆம் பரிசையும், முருக தனுசுகோடி மகளிர் மேல்நிலைப்பள்ளி 12ஆம் வகுப்பு மாணவி செல்வி செ. மாரியம்மாள் மூன்றாம் பரிசையும், **கட்டுரைப் போட்டியில்** விருகம்பாக்கம் ஜெய்கோபால் கரோடியா அரசு மேல்நிலைப்பள்ளி 12ஆம் வகுப்பு மாணவி செல்வி நீ. இளவரசி முதல் பரிசையும் எருக்கஞ்சேரி புனித சூசையப்பர் பள்ளி 12ஆம் வகுப்பு மாணவன் செல்வன் கி. வசந்தகுமார் இரண்டாம் பரிசையும், கொருக்குப்பேட்டை டேனியல் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி 12ஆம் வகுப்பு மாணவன் செல்வன் வெ. சுபாஷ் மூன்றாம் பரிசையும், **பேச்சுப் போட்டியில்** அயன்புரம் ஊ.பு.அ. சௌந்திரபாண்டியன் மேல்நிலைப்பள்ளி 12ஆம் வகுப்பு மாணவன் செல்வன் ஆ. ஜான்பால் தினகரன் முதல் பரிசையும், சென்னை தனலட்சுமி மேல்நிலைப்பள்ளி 11ஆம் வகுப்பு மாணவன் செல்வன் ஐ. சதாம்உசேன் இரண்டாம் பரிசையும், சென்னை இராமகிருஷ்ணா மிஷன் பதின்நிலை மேல்நிலைப்பள்ளி 12ஆம் வகுப்பு மாணவன் செல்வன் இரா.கா. விசுவகண்ணன் மூன்றாம் பரிசையும் பெற்றனர். இந்நிகழ்ச்சிக்கு சென்னை மாவட்ட தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர்(பொ) திரு. ம. சி. தியாகராசன் அவர்கள் வரவேற்புரையும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் மற்றும் தமிழ் வளர்ச்சி இயக்குநர்(பொ) முனைவர் கோ. விசயராகவன் அவர்கள் தலைமையுரையும் மொழிப்பெயர்ப்புத் துறை இயக்குநர் முனைவர் ந. அருள் அவர்கள் சிறப்புரையும் நகைச்சுவை இளவல் கவிஞர் பி. மணிகண்டன் அவர்கள் வாழ்த்துரை வழங்கி வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு அளித்தும் கோடம்பாக்கம் பதிப்பகச் செம்மல் க. கணபதி அரசு மேல்நிலைப்பள்ளி முதுகலைத் தமிழாசிரியர் திரு. குணசேகரன் அவர்கள் நன்றியுரையும் வழங்கினார்கள். ஒவ்வொரு போட்டிக்கும் முதல் பரிசு ரூ.10000/–, இரண்டாம் பரிசு ரூ. 7000/–, மூன்றாம் பரிசு ரூ.5000/–. மாவட்ட அளவில் முதல் பரிசு பெற்ற மாணவர்கள் மாநில அளவில் நடைபெறும் போட்டியில் கலந்து கொள்வர்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**